09.06.2025

O.S.No.22/2014

பி.வா.சா.2.திரு.ரவீந்திரன் த/பெ.ராமையா

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கின் 12 ம் பிரதிவாதி ஆவேன். வாதிகள் இந்த வழக்கை பிரதிவாதிகளின் மீது விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது அப்பா இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள வெள்ளளூர் கிராமத்தில் உள்ள சொத்தை வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த விபரம் எனக்கு தெரியும். வாதிகள் இந்த வழக்கை வா.சா.ஆ 1 ஆவணமான 20.11.1934 ம் தேதிய பதிவு உயில் ஆவணத்தின் சாசனத்தின்படி உரிமையுள்ள அடிப்படையில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அந்த உயில் செல்லக்கூடியது அல்ல. அதே தேதியில் வாசுதேவ செட்டியாருக்கு 4 ம் ஐட்ட சொத்தை பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள். உயில் செல்லத்தக்கதல்ல என்பதற்காக நானோ, எனது தகப்பனாரோ அல்லது வாசுதேவ செட்டியாரோ நீதிமன்ற உத்தரவுகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியவரவில்லை. உயில் எழுதியபின்பு வீரணன் அம்பலம் இறந்துபோன பின்பு 27.02.1937 ஆம் தேதி அவரது வாரிசுகளான கருப்பையாவும், கருப்பாயியும் சேர்ந்து வாசுதேவ செட்டியாருக்கு ஏற்கனவே அடமான செய்து கொடுக்கப்பட்ட சொத்தை பதிவு செய்யப்பட்ட கிரையம் எழுதி கொடுத்துவிட்டார்கள். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை ஆங்கிலத்தில் உள்ளதால் அதில் உள்ள விபரங்கள் நான் சொல்லி தயாரிக்கப்பட்டதா என்றால் ஆமாம். எதிர் வழக்கு அடமான செய்யப்பட்ட விபரங்கள் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயிலானது கருப்பையா என்பவரது பெயருக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயிலை எழுதி கொடுத்த நபர் இறந்துவிட்டபடியால் உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றால் உயிலை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. உயிலை பற்றி எனக்கு எதுவும் தெரியாமல் எந்த அடிப்படையில் உயில் செல்லாது என்று கூறினேன் என்றால் வாதி தொடுத்த வழக்கின் அடிப்படையிலேயே தெரிவித்தேன். வழக்கில் சம்ந்தப்பட்ட வா.சா.ஆ 1 உயிலை முழுமையாக படித்துப்பார்த்து தெரிந்து கொண்டு எதிர் வழக்குரை தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். உயிலை எழுதி வைத்த வீரணன் அம்பலம் நீதிமன்றத்தில் அமீனா வேலை பார்த்து வந்த விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ 1 உயிலில் வழக்கு சொத்துகள் தர்ம காரியங்கள் நடத்துவதற்காக என்று

எழுதிப்பட்டுள்ளது என்றால் வழக்கிற்காக அவ்வாறு ஜோடிக்கப்பட்டுள்ளது. வழக்கானது 2014 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்தவர்கள் 20.11.1934 ஆம் தேதிய உயிலை ஜோடிக்க முடியாது என்றால் உயில் செல்லாதது. நான் 1953 ஆம் ஆண்டு பிறந்தேன். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உயிலானது நான் பிறப்பதற்கு முன்பாகவே உள்ள உயில் என்றால் ஆமாம். நான் அந்த உயிலை பற்றி முழுமையாக தெரிந்து கொள்ளவில்லை என்பதால் அந்த உயிலை செல்லும், செல்லாத என்று சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. உயிலில் கண்டுள்ள சரத்துகளின் படி ஆண்வாரிசுகள் மட்டுமே எந்த வில்லங்கத்திற்கும் உட்படுத்தாது அனுபவித்து வரவேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆண் வாரிசுகள் தான் கிரையம் செய்துள்ளார்கள். உயில் சரத்துகளின் படி யார் கிரையம் செய்து கொடுத்தாலும் அது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வாதிகள் இறந்துபோன கருப்பையாவின் வாரிசுகள் என்றால் சரிதான். நான் கருப்பையாவின் வாரிசு கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்க்கும்போது 01.04.2013 ஆம் தேதியில் தான் கிரையம் செய்யப்பட்டுள்ள விபரம் வாதிகளுக்கு தெரியவந்தது என்றால் 87 வருடங்களாக வழக்கு சம்மந்தமாக வாதிகளுக்கு எதுவும் தெரியாது. தற்போது விலை வாசி கூடிவிட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். சொத்திற்கு வடபுரம் ரோடு உள்ளது. கிழக்கு பகுதியில் ஓடை உள்ளது. தெற்கு பக்கம் எனது பெயரில் உள்ள சொத்து உள்ளது. நான் சொல்வது போல் தெற்கு பக்கம் எனது பெயரில் உள்ள சொத்துற்கு தெற்கு பக்கம் அருணாசல ஆசாரி சொத்து உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது நானே விவசாயம் செய்து வருகிறேன்.

2. வழக்குரையில் 4 ம் ஐட்ட சொத்தில் தெற்கு பக்கம் அருணாசல ஆசாரி நஞ்சைக்கும் வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் எழுதப்பட்டுள்ளது. ஆனால் சொத்தில் அவ்வாறு யாரும் இல்லை. மேற்படி சொத்திற்கு பழைய பட்டா எண்.1089 என்றால் சரிதான். புதிய பட்டா எண்.2428 என்றால் இல்லை. புதிய பட்டா எண். 850 ஆகும். வாதி தரப்பில் புதிய பட்டா எண்.2428 என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பட்டா எண் 2428 எனது பெயரில் உள்ள சொத்திற்கு உள்ளதாகும். பட்டா எண். 2428 ஐ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியமா என்றால் முடியும். பட்டா எண்.2428 ஆனது சர்வே எண். 651( 2), 98 ஏர்ஸ் 2 ஏர்ஸ் கிணறு உட்பட சம்மந்தப்பட்ட சொத்துக்குரியது என்றால் சரிதான். நான் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 17 ஆனது 20.11.1934 தேதியிட்ட உயில் ஆவணமா என்றால் அடமான ஆவணம் ஆகும். பி.வா.சா.ஆ 17 ஆவணமே எழுதி

கொடுத்தற்கு சொத்தை வில்லங்கம் செய்ய உரிமை இல்லை என்றால் சாட்சி இந்த கேள்விக்கு நேரடியாக எந்த பதிலும் அளிக்க மறுக்கிறார். பி.வா.சா.ஆ 18 ஆவணமானது வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தின் சரத்துகளின்படி செல்லாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 19 ஆவணமானது வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தின் சரத்துகளின்படி செல்லாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 19 ஆவணத்தில் உள்ள சொத்களாது வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள சொத்துகளா என்றால் இல்லை. அதனுடன் சேர்த்து வேறு சில சொத்துகளையும் விற்பனை செய்துள்ளார். பி.வா.சா.ஆ 20 ஆவணத்தில் உள்ள சொத்களாது வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள சொத்துகளா என்றால் இல்லை. அதனுடன் சேர்த்து வேறு சில சொத்துகளையும் குறிப்பிட்டுள்ளார்கள்.

பி.வா.சா.ஆ 21, 22 ஆகிய ஆவணங்களில் உள்ள சொத்துகளும் வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தில் கட்டுப்பட்டுள்ள சொத்துகள் தான் என்றால் இல்லை. அதனுடன் சேர்த்து வேறு சில சொத்துகளையும் குறிப்பிட்டுள்ளார்கள். வாதி வழக்குப்படி உயில் எழுதி வைத்த வீரணன் அம்பலம் 08.01.1935 ஆம் தேதியில் இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வீரணன் அம்பலம் இறந்தபின்பு கருப்பையா அந்த சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் கருப்பையாவும் அவரது அம்மா கருப்பாயியும் அனுபவித்து வந்தார்கள். வீரணன் அம்பலம் என்பவரது சம்மாதியை வழக்கு சொத்தில் ஒரு இடத்தில் கருப்பையா கட்டிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கில் சாமாதி இருப்பதாக தெரிவித்தபின்பும் நான் அதுகுறித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 உயிலில் சரத்துகளின்படி வீரணன் அம்பலம் இறந்த நாளான மார்கழி மாதம் அவிட்டம் நட்சத்திரத்தில் ஒவ்வொரு வருடமும் குரு பூஜை நடத்தில் அன்றைய தேதியில் ரூ 10 க்கு பரதேதிகளுக்கு அன்னதானம் செய்யப்பட வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதன்படி வாதிகளும் அவரது முன்னோர்களும் வருட வருடம் அன்னதானம் செய்து வருகிறார்கள் என்றாலும் நான் வேண்டும் என்றே தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக இந்த குரு பூஜை நடத்தியது சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். வீரணன் அம்பலம் மகன் கருப்பையா என்பவர் 26.04.1992 ல் காலமாகிவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கிற்கு முன்பாக மேற்படி விபரங்களை குறிப்பிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்பு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ 20 ஆவணமானது எனக்கு அனுப்பப்பட்டு பெற்று கொள்ளாமல் திரும்ப வந்தது என்றால் சரிதான். வாதியின் வழக்கின்படி வழக்கு சொத்துகளை பொறுத்து

தர்ம காரியங்கள் செய்வதற்காக உயில் எழுதி வைக்கப்பட்டு மேற்படி சொத்துகளை வில்லங்கம் செய்யப்படாது என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி சொத்துகள் டிரஸ்டு சொத்துகள் என்றாலும், டிரஸ்டு சொத்துகளை நீதிமன்றத்தில் அனுமதியுடன் தான் விற்கவும், வாங்கவும் முடியும் என்றாலும் சரியல்ல. நீதிமன்றம் அனுமதி இல்லாமல் எனது அப்பா கிரையம் வாங்கியது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது அப்பா வாங்கிய கிரைய பத்திரமே செல்லாது என்பதால் என்னிடம் அனுபவத்தில் உள்ளது என்று கூறுவது முறையற்ற அனுபவமே என்றால் சரியல்ல. எனது அப்பாவும் எந்த ஒரு நீதிமன்றத்தில் அனுமதியோடு சொத்தை வாங்கியதாக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் உயிலை பற்றி எங்கள் யாருக்கும் தெரியாது. வழக்கு சொத்தானது டிரஸ்டு சொத்து என்ற விபரம் தெரிந்து தான் எனது தகப்பானர் வாங்கியுள்ளார் என்றால் இல்லை. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்க கூடியது என்றால் இல்லை.